# கல்வியைத் தனியார் மயப்படுத்தலும், சந்தைப்படுத்தலும்

மா.சின்னத்தம்பி

**ஆய்வுச்சுருக்கம்**

*அரசு நிதி, நிர்வாக பலவீனங்களினால் கல்வியை தனியாரிடம் விடவேண்டியதாயிற்று. தனியார் துறையினர் விஷேடமான நலன்களை பெற்றோருக்கு திறமையான சந்தைப்படுத்தலைப் பயன்படுத்தினர், எனினும் நாடுகளின் அனுபவங்கள் அரசமேற்பார்வையுடனான தனியார் துறைக்கல்வியை சந்தைப்படுத்துவதே எதிர்காலத்தில் சாத்தியமானது என்பதை வலியுறுத்துகின்றன.*

**அறிமுகம்**

பொருளாதார உற்பத்தி மற்றும் வியாபார, சேவைத்துறைகள் அரச பொறுப்பில் உள்ள நிறுவனங்களினால் நிர்வகிக்கப்பட்டு வந்தநிலை எல்லா நாடுகளிலும் 1980கள் வரை வலுவானதாயிருந்தது. ஆனால் 1980களின் பின் உலக ரீதியில் பல நாடுகளில் அவற்றைத் தனியாருக்கு மாற்றிவிடும் போக்கு தென்படலாயிற்று.

இத்தகைய தனியார் மயப்படுத்தல் கல்வித் துறைசார் நிறுவனங்கள் தொடர்பாகவும் முதன்மை பெற்றபோது அத்தகைய செயற்பாடு மறுபுறம் கல்வி சந்தைப்படுத்தல் முறையுடன் இணைந்த வகையில் வளர்ச்சி பெறவும் உதவிற்று.

தானியம், பிடவை, பாவனைப் பொருட்கள் போன்று கல்வியும் ஒரு பொருளாதாரப் பண்டம் என்ற கருத்து வளர்ச்சியடைந்த நிலையில் கல்வித்துறையும் ஒரு பொருளாதார பண்புத்தகைமை கொண்டதாக அங்கீகாரம் பெற்றது. கல்வியின் இத்தகைய புதிய தோற்றமே அதனை சந்தைப்படுத்தல் பற்றிய புதிய அணுகுமுறையுடன் நெருக்கமடையச் செய்தது. கல்வியை தனியார் மயப்படுத்தல் என்பதும், சந்தைப்படுத்தல் என்பதும் வெவ்வேறான நடவடிக்கைகளேயாயினும், மிகவும் தெளிவாகப் பிரிக்க முடியாதனவாகவே அவை விளங்குகின்றன.

இப்பின்னணியில் இக்கட்டுரை கல்வியை தனியார்மயப்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பான வளர்ச்சிப்போக்கு மற்றும் அதன் நேர், எதிர்த்தாக்கங்கள் பற்றி ஆராய முற்படுகிறது.

**தனியார் பண்டமும், தனியார் மயப்படுத்தலும்.**

1980களிலிருந்து அரசாங்கங்கள் எல்லா நாடுகளிலும் தமது பொறுப்புக்களை படிப்படியாக தனியார் துறைக்கு மாற்ற முயன்றன. முதலாளித்துவ பொருளாதாரங்களிலும், சமவுடைமை நாடுகளிலும் (குறிப்பாக 1990 களிலிருந்து) இவ்வாறு பொருளாதார நிறுவனங்களை நிர்வகிப்பதிலிருந்து அரசாங்கங்கள் படிப்படியாக விலக முயன்றன. முதலீடு, செலவு, வருவாய், கட்டணம், இலாபம், போட்டி முறைமை போன்ற பல தகைமைப் பண்புகளினடிப்படையில் கல்வி நிறுவனங்களும் பொருளாதாரத் தன்மையுடையனவாக உலக வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. உலக

வர்த்தக நிறுவன (World Trade Organization - WTO) வளர்ச்சிமுறை இதற்குரிய உலகளாவிய அங்கீகாரத்தைப் பெற்றுக்கொடுத்திருந்தது.

இந்தவகையில் பொருளாதார நிறுவனங்களைத் தனியார் மயப்படுத்து வதற்குப் பின்னணியாக – பொறுப்பாக இருந்த எல்லா நிலைமைகளும், காரணிகளும் கல்வி நிறுவனங்களைத் தனியார் மயப்படுத்துவதற்கும் உதவின என்பதை முதலில் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

1990களிலிருந்து உலகில் எண்பதிற்கு மேற்பட்ட நாடுகளில் 8500க்கு மேற்பட்ட அரச பொருட்பிலிருந்த நிறுவனங்கள் தனியார் மயப்படுத்தப்பட்டிருந்தன என்பதை உலகவங்கியின் பல பொருளியலாளர்[1] மதிப்பீடு செய்திருந்தனர். மிகப் பெரிய 30 அரச நிறுவனங்கள் 19 பில்லியன் டொலர் பெறுமதி கொண்டனவாக 1990 – 1992 காலப்பகுதியில் வளர்ந்துவரும் நாடுகளில் தனியாருக்கு விற்கப்பட்டிருந்தன.[2] மலேசியா, செக்கோசிலா வாக்கியா (1992இல்) போன்ற நாடுகளும் தனியார் முகாமைத்துவத் தேவைக்காக தனியாருக்குதவும் நிறுவனங்களை மாற்றியிருந்தன.[3] அரச நிறுவனங்களின் வினைத் திறனின்மை, செலவு அதிகரித்தல், அரச மானியங்களைத் தொடர்ந்து அதிகரிக்க முடியாத நிதி நெருக்கடியில் சிக்கித்தவித்தமை, ஆற்றல் மிகு முகாமையாளரை உயர்ந்த ஊதியத்தில் அமர்த்துவதற்கு அரச சட்டங்கள், சுற்றுநிருபங்கள் என்பன இடமளிக்காமை போன்ற தொடர்புடையதான பல காரணிகள் அரச நிறுவனங்களை தனியார் துறைக்கு மாற்றுதற்கு பொறுப்பாயிருந்தன.[4] இத்தகைய தனியார் மயப்படுத்தல் குறிப்பிடத்தக்களவு வெற்றியை ஏற்படுத்தியிருந்தது. சிலி, ஜமேக்கா, மெக்சிக்கோ, சிங்கப்பூர் போன்ற 15 நாடுகளில் இவ்வாறு தனியாருக்கு மாற்றப்பட்ட 41 நிறுவனங்களின் சொத்துக்களும், வருமானங்களும், இலாபங்களும், மூலதனக் கட்டமைப்பும் குறிப்பிடத்தக்களவில் திருப்தி கரமாக மாறியிருந்தன.[5]

இத்தகைய புதிய அலையின் செல்வாக்குக்கு உட்பட்டு பாடசாலைகள், தொழில்நுட்பக்கல்வி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள் போன்ற பலவற்றை அரசாங்கங்கள் தமது கையிலிருந்து தனியார் நிறுவனங்களுக்கு மாற்றலாயின. இவ்வாறு தனியார் துறைக்கு மாற்றுவதற்கு பல்வேறு சார்பு நிலைக்காரணிகள் இருக்கின்றபோதிலும், அவற்றுள் முதன்மையானது வினைத்திறனுடனும் விளைதிறனுடனும் கல்விப் பண்டத்தை சந்தைப் படுத்தும் தனியார்துறையின் முகாமைத்துவ உபாயங்களும் ஆற்றல்களுமேயாகும்.

கல்வி அறிவு பெறாதவர்களைவிட, போதிய கல்வியறிவு பெற்றவர்கள் சமூக வாழ்வில் சிறப்பான மதிப்பையும், முன்னுரிமையையும் அதன் வழியாக உயர்ந்த வருமானம் தரும் தொழில்களையும், சிறந்த மதிப்பார்ந்த வாழ்க்கைத் தரத்தையும் பெற்றதனடிப்படையில்தான் கல்வி ஒரு தனியார் பண்டம் (Private good) என்று கருதப்படுகிறது. திறமையை விரும்பி மதிக்கின்ற சமூக பொருளாதார நிலைமைகளில், கல்வி தனியார் பண்டம் என்ற அங்கீகாரம் மிக உயர்ந்ததாகிவிடுகிறது. சட்டபூர்வமான முன்னுரிமைகளை தரமான உயர் கல்வியைப் பெற்றவர்கள் பெற்றுவருவதை முதலாளித்துவ நாடுகளிலும், மூன்றாம்

உலகநாடுகளிலும் தெளிவாகக் காண முடிகிறது. பல கம்யூனிச நாடுகளிற்கூட பல்வேறு சமூகக் குழுக்களிடையே கூடுதலான சமத்துவத்தை உருவாக்குவதில் கல்வி பிரதான வகிபங்கைக் கொண்டுள்ளது. வறிய நாடுகளில் சமூக ரீதியில் ஒடுக்கப்பட்டவர்கள் கூட கல்விப்பண்டத்தை கையகப்படுத்துவதன்மூலம் இழந்த சமூக நலன்களையும், உரிமைகளையும், பாதுகாப்பையும் பெற்று வருவதைக் காணமுடியும். இந்தியா, வங்காளதேசம் போன்ற நாடுகளில் இதற்கான உதாரணங்களை நிறையவே நோக்க முடியும்.

இத்தகைய கல்வி என்ற தனியார் பண்டத்தை வினைத்திறனுடன் விற்பது சந்தைப்படுத்தல் ஆகிறது. அதனை சாதுரியமாக கவும், தொடர் ஊக்கத்துடனும் மேற்கொள்ளும் வசதிகளும் வலிமையும் தனியார் நிறுவனங் களுக்கே அதிகமுள்ளன. கல்வி நிறுவனங்கள் எல்லாவற்றையும் வியாபார நிறுவன மாதிரியில் நிர்வகிக்க வேண்டும். இதற்கு அரசாங் கங்களைவிட தனியார் உரிமையும், பொறுப் புணர்வும், முகாமைத்திறன்களுமே பொருத்த மானவை. தனியார் மயப்பட்ட கல்வி நிறுவனங்கள் இயங்கியல் தன்மை மிக்கவை; வினைத்திறன் கொண்டவை; சந்தையின் போட்டி நிலைமைகளுக்கேற்ப தாமதமின்றி மாறுவதற் குரியதாக விரைவான முடிவுகளை மேற்கொள்ளக்கூடியவை; நிதி ரீதியாக கூடியளவுக்கு வகை கூறும் ஆற்றல் மிக்கனவா கவும் தரமான கல்வியை வழங்கு வதன் மூலமாக மாத்திரமே நிலைத்திருக்கக் கூடியனவாகவும் விளங்குவன; மாணவர்களும் பெற்றோரும் சுதந்திரமாகத் தமக்குரிய கற்கை நெறியையும், கல்வி நிறுவனங்களையும் தெரிவு செய்வதற்கு அதிகளவு வாய்ப்பினை வழங்குவன; இவை யாவும் கல்விசார் சனநாயக நடைமுறைகளை அதிகரிக்கச் செய்கின்றன. சிறந்த கல்வித் தெரிவுக்காக எப்பிரதேசத்தி ற்கும் சென்று கல்வி கற்கும் வாய்ப்புக்களை எல்லோரும் பெறுதற்கு தனியார் துறையினரால் சந்தைப் படுத்தப்படும் கல்வி முறையே வாய்ப்பளிக்கும். பெரும்பாலான நாடுகளில் அரச பாடசாலைகள், பிள்ளைகள் ஒவ்வொரு வரும் தமது வசிப்பிட சுற்று எல்லைக்குள் கற்கவேண்டும் என்று வற்புறுத்தி வருகின்றன. பல பின்தங்கிய கிராமிய சமூகங்கள் நவீனமயப் படுத்தப்படாத – பின்தங்கிய பாடசாலைகளில் மரபுவழியான கற்கை நெறிகளையே கற்குமாறு இவை நிர்ப்பந்திக்கின்றன. இந்நடைமுறை, திட்டமிட்ட பாரபட்சமான – பாதகமான கல்வி ஏற்பாடே யாகும். கல்வி கற்ற பிரசைகள் எந்த ஒரு சமூகத்தினதும் பொருளாதார முன்னேற்றத் திற்கு மிகவும் வேண்டப்படுபவர்கள். சர்வதேச ரீதியில் பிற நாடுகளுடன் ஒப்பிடும்போது ஒரு நாடு பயிற்சி பெற்ற நிபுணத்துவ ஊழியத்தைக் கொண்டிருக்கவேண்டுமானின் கல்வியை முன்னேற்று வது அவசியமாகிறது. தேசிய அபிவிருத்தி அரசின் கடப்பாடு என்று ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளது. இதனால் கல்வி அரசினால் எல்லோருக்கும் வழங்கப்பட வேண்டிய பண்டம் என்பதை அனுமதிக்கு மிடத்து கல்வி பொதுப்பண்டமாகவே விளங்கும். தமது கோட்பாடுகளையும், உணர்வுகளையும் மதிக்கும் குடிமக்களை உருவாக்குவதில் ஆளும் கட்சியினர் கண்ணாயிருப்பதால் அரசாங்கம் கல்வி வழங்குவதற்காக முதலீடு செய்யும்போது அதனை அரசியல் முதலீடு (Political Investment) என்றே அழைக்கின்றனர்.[8] புத்திசாலித்தனமான முடிவுகளை மேற்கொள்ள க்கூடியவர்களையும், தெளிவான, சீரான நடத்தை கொண்டவர்களையும் உருவாக்கும்

பொறுப்புணர்வுடன் அரசாங்கம் கல்வியில் முதலீடு செய்யும்போது கல்வி பொதுப் பண்டம்[7] என்றே கருதப்படுகிறது. சமூக முதலீடு என்ற நோக்கில் கல்வியில் அரசாங்கம் முதலீடு செய்வதிலிருந்து விலகிவிட முடியாது; விலகிவிடக்கூடாது என்ற கருத்தும் முற்றாக ஒய்ந்து போய்விடவில்லை என்பதும் மனம் கொள்ளத் தக்கதாகும். இதனடிப்படையில்தான் தனியார் மயப்படுத்துவதை அனுமதிப்பவர்கள் கூட கல்வியிலிருந்து அரசு முற்றாக விலகி விடுவதை விரும்புவதில்லை. இந்த கருத்தின் பின்னணியில்தான் கல்வியைச் சந்தைப்படுத் துவது பற்றிய எண்ணங்கள், கோட்பாடுகள், மற்றும் நடைமுறைகளை விளங்கிக்கொள்ள முடியும். இக்கருத்துக்கள் கல்வி என்பது தனியார் பண்டமா அல்லது பொதுப்பண்டமா என்ற முடிவற்ற விவாதத்துக்கும் வழிசமைத் துள்ளன.

**கல்வியைச் சந்தைப்படுத்தல்**

கல்வியைச் சந்தைப்படுத்துதல் என்ற சொற்றொடரின் உண்மையான கருத்தை முதலில் விளங்கிக்கொள்ள வேண்டும். சந்தைப் படுத்தல் என்பது அரசின் கட்டுப்பாடுகள் ஏதுமற்ற வகையில் சுதந்திரமான போட்டிமிக்க சந்தை நடைமுறைகளினடிப்படையில் பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் போன்ற கல்வி நிறுவனங்களை நிர்வகித்தலாகும்.[8] இதன்படி கல்வி நிறுவனங்கள் அனைத்தும் பின்வரும் கல்விசார் நடைமுறைகளைப் பின்பற்றும்

- கல்வி வழங்கும் செலவுகளைக் குறைத்தல்.
- பெற்றோர், மாணவர் மட்டத்தில் விரும்பப்படாத கற்கை நெறிகளைக் கைவிடுதல்.
- தேவையுடைய, மதிப்புமிக்க நெறிகளை நடாத்துதல், விரிவுபடுத்தல்.
- கல்விச் சேவையின் விற்பனையைக் கூட்டவும் கல்வி நிறுவனங்கள் உழைக்கத்தக்க இலாப எல்லையை உயர்த்தவும் பாடுபடுதல்.
- சந்தையில் ஏனைய கல்வி நிறுவனங் களுடன் போட்டியிடும் ஆற்றலை அதிகரி க்கும் வகையில் விளம்பரப்படுத்துதல்.

அரசாங்கங்களினால் நிர்வகிக்கப்படும் பாடசாலைகள் இத்தகைய நடைமுறைகளில் ஈடுபடுவதில்லை அல்லது அவற்றில் நாட்டம் கொள்வதில்லை. அரசாங்கங்கள் தமது நிதி நெருக்கடிகளின் போதெல்லாம் கல்விக்கான ஒதுக்கீடுகளைக் குறைத்தன. அப்போது சில நாடுகள் தனியார் துறையினருக்கும் சந்தைப் படுத்தலுக்கும் இடமளித்து தம்மை நியாயப் படுத்திக் கொண்டன. பிரித்தானி யாவில் தட்சரின் அரசாங்கம் சனநாயகப் படுத்துதல், பன்முகப்படுத்துதல் கோட்பாடு களினடிப் படையில் தனது முடிவுகளை நியாயப்படுத்திக் கொண்டது.[9] 1980களின் முன்பு இங்கிலாந்தி லும், வேல்சிலும் சனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட கல்வி உள்ளூர் அதிகார சபைகளி னால் பராமரிக்கப்பட்ட அரச பாடசாலை களிலேயே பெரும்பாலானவர்கள் கல்வி கற்றனர். தட்சரின் அரசினால் 1980இலும் 1990களின் முற்பகுதியிலும் கொண்டுவரப்பட்ட கல்விச் சட்டத்தின் கீழ் உள்ளூர் அதிகாரசபை யின் பொறுப்புக்கள் தனியார் பாடசாலை களுக்கு மாற்றப்பட்டன. பலவழிகளில் தனியார் மயப்படுத்தலுக்கும் சந்தைப்படுத்தலுக்கும் அவை உதவின.[10]

- வறிய பெற்றோரின் கல்வியில் திறமைமிக்க பிள்ளைகள் உயர்குழாத்

தினர் கற்கும் தனியார் பாடசாலைகளில் கற்பதற்கு இவை உதவின.

- வியாபார நிறுவனங்களின் அனுசரணை யுடன் செயற்படும் சுதந்திரமான நம்பிக்கைப் பொறுப்பினரால் நிர்வகிக்கப் படும் நகர தொழில்நுட்பப் பாடசாலைகள் நகரில் வாழ்வோருக்காக ஏற்படுத்தப் பட்டன.
- 1988 கல்விச் சீர்திருத்தச் சட்டத்தினடிப் படையில் உள்ளூர் கல்வி அதிகார சபையிலிருந்து பாடசாலைகள் வெளி யேறி மத்திய அரசநிதியில் இயங்கவும் அனுமதிக்கப்பட்டன.
- அரச திட்டத்திலிருந்து விலகி, தனியார் பாடசாலைகளை உருவாக்கும் வகையில் புதிய மாதிரி விசேட பாடசாலைகள் (New type of Specialist Schools) உருவாக்குவதற்கு ஏற்றதாக புதிய சட்டங்கள் கொண்டு வரப்பட்டன.
- அரச பாடசாலைகள் திறந்த அனுமதிக் கொள்கையை கையாண்டு, தலா மாணவருக்குரிய நிதியை கூடுதலாகப் பெற முயன்றன. 1988 இல் அறிமுகமான இப்புதிய முறை அரைகுறையான சந்தைப் படுத்தும் (Quasi - Marketization) நடைமுறைக்கு உதவிற்று.
- தனியார் மயப்படுத்துவதை ஊக்கு விக்கும் வகையில், எல்லாப் பாடசாலை களையும் வினைத்திறனுடையதாக நிர்வகிப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட் டன. பொதுப்பாடசாலைகள் தனியார் பாடசாலைகள் போன்று சந்தைப்படுத்தும் உபாயங்களைக் கையாள்வதாக இவை அமைந்தன.[11]

நியூசிலாந்து நாட்டின் அனுபவங்களும் பாடசாலைகள் வினைத்திறனுடன் பெற்றோர் விருப்பத்திற்கு முன்னுரிமை வழங்குவதற்குரிய வகையிலும் பல மாற்றங்கள் (1980களில்) மேற் கொள்ளப்பட்டிருந்ததைக் காட்டின. 1990களில் வெற்றிபெற்ற தேசியக்கட்சி அரசாங்கம் ஆசிரிய சம்பளங்கள், ஆதார சேவைகள் போன்ற செலவுகளுக்குரிய நிதி ஒதுக்கீடுகளை மத்திய அரச மற்றும் பிரதேச கல்விச் சபைகளின் பொறுப்பிலிருந்து தனிப்பட்ட பாடசாலைகளு க்கு மாற்றியது.[12] சுயமுகாமைத்துவத்திற்கு உதவுவதன் மூலம் இவை சந்தைப்படுத்தலை வினைத்திறனுடையதாக்கின. தனியார் பாடசாலைகளில் கற்பதற்கு அரசாங்கம் தனது நிதியை வழங்கி உதவுவதன் மூலம் – வவுச்சர் முறை மூலம் சந்தைப்படுத்தல் முறையை ஒத்த நடை முறைக்கு உதவிற்று. இங்கிலாந்தில் நிகழ்ந்தது போலவே அரச பாடசாலை முறையிலி ருந்து தனியார் மயப்படுத்தல் மூலமாக சந்தைப்படுத்தலுக்கு நகர்ந்து செல்லும் போக்கினையே இது காட்டியது.

ஐக்கிய அமெரிக்காவிலும் இதே காலப்ப குதியில் நிகழ்ந்த மாற்றங்கள் பிள்ளைகளின் கல்வி மற்றும் கற்கும் பாடசாலைகளைத் தெரிவு செய்தல் தொடர்பான உரிமை பெற்றோருக்கு வழங்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்தின. இதற்கு தனியார் மயப்படுத்தலும் கல்வியைச் சந்தைப்படுத்தலும் அவசியமெனக் கருதி ஊக்குவிக்கப்பட்டது.[13] பின்வரும் மாதிரியிலான பாடசாலைகள் இதனை ஊக்குவிக்க உதவின.

- விசேடித்த பாடசாலை அல்லது கவனக் குவிப்புப் பாடசாலை (Specialist or Focus Schools)
- பதிலீட்டுப் பாடசாலைகள் (Alternative Schools)

- ஓரளவு தன்னாட்சி கொண்ட பட்டயப் பாடசாலைகள் (Quasi - Autonomous Charter Schools)

இத்தகைய தனியார் மயப்படுத்தலுடன் சந்தைப்படுத்தும் நடைமுறைகள் பின்வரும் நன்மைகளை ஏற்படுத்துவதாக அவர்கள் ஏற்றுக் கொண்டனர்.[14]

சிறுபான்மையினரின் பிள்ளைகள் சிறந்த பாடசாலைகளில் தரமான கல்வியைப் பெற இம் முறை வாய்ப்பளித்தது. இந்தியாவிலும் இதே அனுபவங்களைக் காண முடிகிறது.

வறிய குடும்பத்தைச் சேர்ந்த திறமைமிக்க மாணவர்கள் கூட மோசமான தமது பிரதேச பாடசாலைகளிலிருந்து விலகி சிறந்த பாடசாலைகளில் கல்வி கற்பதற்கு இவை உதவின. விஸ்கொன்சீன், மில்வொக்கி போன்ற பிரதேசங்களில் தனியார் பாடசாலைகளில் கற்பதற்கு உதவுகின்ற வவுச்சர் முறையை அரசாங்கம் அறிமுகப்படுத்தி நிதியை (State funded private school voucher scheme) வழங்குவதற்குரிய திட்டத்தை பின்பற்றியது. மரபு வழியான அரசியல்வாதிகள் மற்றும் வெள்ளையர்களின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட கல்விமுறையை மாற்றுவதற்கு இவை உதவின.[15]

தனியாரால் நிர்வகிக்கப்படும் பாடசாலை களை ஊக்குவிப்பதும் அத்துடன் கல்வியைச் சந்தைப்படுத்துவதை இணைப்பதும் முக்கிய மானதென புதிய கல்வி சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தியவர்கள் கருதினர்.

1999இல் இலாபநோக்கத்துடன் தொழிற் படும் எடிசன் கம்பனி தனது செயற்திட்டத்தின் மூலமாக (Edison Project) 48 பாடசாலை களைப் பொறுப்பேற்று நடாத்தியது. அப்போது தனது நிறுவனத்தின் வருமானத்தை 68 மில்லியன்டொலர்களிருந்து 126 மில்லியன் டொலர்களாக அதிகரித்துக்கொள்ளும் வகையில் கல்வியைச் சந்தைப்படுத்துவதில் அதிக கவனம் செலுத்தியது.[16]

இவ்வாறு பல்வேறு நாடுகளிலும் தனியார் மயப்படுத்தலையும் சந்தைப்படுத்தலையும் ஊக்குவிக்கும் சீர்திருத்த நடவடிக்கைகள் 1980களிலிருந்து அதிகரித்த அளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தனியார் மயப்படுத்தலின் விரிவாக்கமாக கல்வியை சந்தைப்படுத்தலின் வெற்றி அமைந்திருந்தது.

## தனியார் கல்வி – சந்தைப்படுத்தல் தேவைப்பாடுகள்

அரசாங்கங்கள் தாம் பொதுநல அரசுகள் என்ற இலட்சியத்துடன் கல்வியை வழங்கிவந்த மரபுவழியான கொள்கை மற்றும் நடைமுறை களில் அதிகளவு பலவீனங்கள் தென்பட்டன. சமூக, பொருளாதார அரசியல் கோட்பாடு களிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டன. இந்தக் காரணிகள் பலவும் சந்தைப்படுத்தலின் அவசியத்தை நியாயப்படுத்தி வருகின்றன. அத்தகைய காரணிகளைப் பின்வருமாறு குறிப்பிடமுடியும்.

1. அரச பாடசாலைகள் பெற்றோரின் அபிலாசைகளை நிறைவேற்றத் தவறி விட்டன. மாறும் புதிய தேவைகளுக்கேற்ப விரைவாக தமது கலைத்திட்டத்தையும், கல்வித் தொழில்நுட்பத்தையும் மாற்றுவதில் இவை வினைத்திறனை வெளிப்படுத்த வில்லை. தரமான கல்வி (Quality of Education) தம் பிள்ளைகளுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற நியாயமான

அவர்களது எதிர்பார்க்கைகள் நிறைவேற்றப் படவில்லை.

2. நாடுகளின் குடித்தொகை அதிகரித்ததால் மாணவர் தொகை பெருகியது. ஊடகங்கள் கல்வி விழிப்புணர்வைத் தூண்டியதாலும் பாடசாலை செல்லும் மாணவர் தொகை அதிகரித்தது. இவ்வாறு பெருகிச் செல்லும் மாணவர் தொகைக் கேற்ப கல்விக்குரிய முதலீடுகளை மாநில மற்றும் மத்திய அரசாங்கங்கள் அதிகரிக்க முடியவில்லை. இதனால் மாணவர் நலன்களைப் பேணமுடியவில்லை. மாணவர் மற்றும் பெற்றோரிடையில் அரச பாடசாலை களின் மதிப்பு வீழ்ச்சியடைந்து செல்லலா யிற்று.

3. மாணவர்களின் கற்றல், கற்றலுக்கான கவிநிலை பற்றிய எண்ணங்களிலும் உளப்பாங்குகளிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. மிகவும் ஒடுங்கிய உணர்வுகளுடனும் குறைந்த வசதிகளுடனும் கற்பதை அவர்கள் தற்போது விரும்புவதில்லை. குறிப்பாக கட்டிளமைப்பருவ மாணவர்களும் பல்கலைக் கழக மாணவர்களும் சிறந்த வசதிகளையும், கல்விசார் கட்டமைப்புக்களையும் விரும்பு கின்றனர். இவற்றை வழங்கக்கூடிய நிதிவசதிகளும் முகாமைத்துவ கட்டமைப்பும் அரச பாடசாலைகளிலும் பல்கலைகழ கங்களிலும் இல்லை. இதனால் இவை கவர்ச்சியற்றகல்வி நிறுவனங்களாகிவிட்டன.

4. உலகமயமாதல் புதிய திறன்களுடனும் புதிய நம்பிக்கைகளுடனும் தொழில் உலகில் நுழையும் மனிதவளத்தை அதிகம் வேண்டி நிற்கிறது. தொழில் உல்கின் தொடர்பும், தொழிலிட அனுபவங்களும் முறைசார் கல்வியுடன் ஒருங்கிணைக்கப்படுதல் வேண்டும். இதற்கான வாய்ப்புக்களை வழங்கக்கூடிய பெரிய வியாபார, கைத் தொழில் நிறுவனங்கள் இத்தகைய கல்வி நிறுவனங்களைத் தொடங்கி சிறந்த விளம்பரங்கள் மூலமாகவும் வேறு உபாயங்களூடாகவும் கல்வியைச் சந்தைப் படுத்தும் போது பெற்றோர், மாணவர் மத்தியில் பெரிய வரவேற்பை இவை பெற்றுக் கொள்ள முடிந்தது.

5. தரமான கல்வி அதிகளவு செலவுடன் தொடர்புடையதாக அமைகிறது. எல்லாப் பெற்றோரும் அதிகம் செலவிடும் நிலையில் இல்லை. அரசாங்கமும் அதிகம் செலவிடும் நிலையில் இல்லை, ஆனால் கல்வி கற்கும் திறமையும் ஊக்கமும் மாணவர்களிடம் அதிகம் உள்ளது. இவர்களை சிறந்த மனிதவளமாக்க விரும்புகிறது அரசாங்கம். இந்தநிலையில் தனியார் கல்வி கற்பதற் கான நிதியுதவி வழங்கும் நிதி நிறுவனங் களுடன் மாணவர்களை இணைத்துவிட வேண்டியுள்ளது. இதற்கு சந்தைப்படுத்தல் நெறிமுறைகள் அவசியமா கிவிட்டன.

6. இன்று கல்வி கற்றவர்கள் தமக்குரிய தொழில் வாய்ப்பையும் குடியுரிமையையும் இணைத்து நோக்கும் புதிய போக்குத் தென்படுகிறது. சர்வதேச தொழில் வாய்ப்புக்கள் இரட்டைக் குடியுரிமையுடன் பிணைக்கப்பட்டுள்ளன பன்மொழியறிவு, தகவல் தொழில்நுட்பத் தேர்ச்சி என்பவற்று டனும் அவை தொடர்புடையன. வசதிமிக்க பெற்றோர் பலர் தம் பிள்ளைகளை இத்தகைய உயர்நிலை வாழ்வு மற்றும் தொழில் நோக்கி முன்னேற்ற விரும்புகின்ற னர்.

எல்லோரையும் ஒரே வகையிலான கல்வி முறைக்குட்படுத்தும் பழைமையான அரச கல்விமுறைக்கு இத்தகைய ஆற்றல் இல்லை என்று பெற்றோர் நம்புகின்றனர். இதற்காக திறமைமிக்க செயற்பாடுகள் கொண்ட கல்வி நிறுவனங்களை நாடுகின்றனர். இத்தேவையை நிறைவு செய்வதாகவே தனியார் கல்வி நிறுவனங்களின் கல்வியை சந்தைப்படுத்தும் போக்கு வலிமை பெற்றுள்ளது.

7. உலகவங்கி பல்வேறு துறைகளிலும் அரச தனியார் பங்களிப்பை ஊக்குவிக்க விரும்புகிறது. இரு துறையினரும் இணைந்து முதலிடல், முகாமை செய்தல் அவசியம் என வற்புறுத்துகிறது. கல்வியும் பொருளாதாரத்துறை போலவே ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதால் தனியார்துறை அரசதுறையுடன் இணைந்து அரசதுறை யின் பலவீனங்களை அகற்றி வினைத்திறன் மிக்க கல்வியைச் சந்தைப்படுத்தும் நடைமுறைகளை மேற்கொள்ள வேண்டும் என்கிறது. மேலும் உலகவங்கியானது கல்வி நிறுவனங்கள் பின்வருவனவற்றில் கவனம் செலுத்த வேண்டும் என சிபார்சு செய்து வருகின்றது.

- அளவிடக்கூடியவாறு குறிக்கோள் களையும் இலக்குகளையும் தீர்மானித்தல்.
- சிறந்த கல்வி தகவல் முகாமை செயலமைப்பு (Educational Management Information System - EMIS) ஒன்றை உருவாக்கிப் பராமரித்தல்.
- முதலீட்டு– வருவாய், முதலீட்டு – இலாப விகிதங்களை முன்னேற்றுதல். இதற்கான எண்பரிசோதனை முறையில் கவனம் செலுத்தல்
- கல்விசார் மனிதவளமுகாமைத்துவத்தில் வினைத்திறனையும் விளைதிறனையும் உறுதிப்படுத்துதல்.
- சந்தையில் போட்டித்திறனை உயர்த்துவதற் கான விளம்பரம், விற்பனை மேம்பாடு, வாடிக்கையாளர் பாதுகாப்பு என்பவற்றில் கவனம் செலுத்துதல்.
- நேர முகாமைத்துவம், வேலைப் பகுப்பாய்வு, மாற்றங்களை முகாமை செய்தல், இடர் முகாமைத்துவம் தொடர்பான வினைத்திற னை உயர்த்துதல்
- ஒழுங்கான கால இடைவெளியில் கல்வி நிறுவன பதிவேடுகள் மற்றும் பெறுபேறு களை மதிப்பீடு செய்தல் அதனடிப்படையில் மாற்றங்களை மேற்கொள்ளுதல், காலத்திற் குப் பொருத்தமான நிறுவனமாக நிலைத் திருக்க உதவுதல்
- இத்தகைய பல மாற்றங்களும் தனியார் மயப்படுத்தலுடன் இணைந்த கல்விச் சந்தைப்படுத்தலின் தேவைகளை உயர்த்தி வருகின்றன.

## முடிவுரை

கல்வியை தனியார் மயப்படுத்தலும் சந்தைப்படுத்தலும் ஒன்றல்ல, ஆனால் மிகவும் வேறுவேறான அம்சங்களுமல்ல. கல்வி நிறுவனங்களில் உரிமை மற்றும் நிர்வாகம், முகாமைத்துவம் என்பவற்றைத் தனியார் கைகளில் விட்டுவிடுவது தனியார் மயமாக்கல் எனப்படும். ஆனால் போட்டிச் சந்தையொன்றில் இலாபகரமாக வினைத்திறனுடன் கல்விச் சேவையை விற்கும் நடைமுறைகளை மேற்கொள்வதே கல்வியைச் சந்தைப்படுத் தலாகும். இது தனியார் மயப்படுத்தலுடன் இணைந்ததாகவோ, வேறுபட்டதாகவோ இருக்க முடியும்.

நடைமுறை அனுபவங்கள் பலவும் தூய்மையான தனியார் மயப்படுத்தல் சாத்தியமில்லை என்பதையே வெளிப்படுத்தி நிற்கின்றன.

பிறீட்மன் (Freedman) குறிப்பிட்டதுபோல அரசு கல்வி நிறுவனங்களை முற்றிலும் இலவசமாக நிர்வகிக்க முடியாது. அரசு கல்வி வழங்கும் தன் பொறுப்பிலிருந்து முழுமையாக விலகிவிடவும் முடியாது. வினைத்திறனின்றி ஏனோதானோவென்று தொடர்ந்து நடாத்தவும் முடியாது.

பூரண சந்தைப் பொருளாதாரமான ஐக்கிய அமெரிக்காவில்கூட கல்வியிலிருந்து அரசாங்கம் முற்றாக விலகிவிடுவது இன்றும் விரும்பப்படவில்லை. விற்றி (Whitty, 1998) பவர் (Power, 1994) ஆகியோர் விவாதிப்பது போல்" வவுச்சர்முறை மூலமாக தனியார் கல்வி நிறுவனங்கள் மீது அரசு தன் கண்காணிப்பை யும், கட்டுப்பாட்டையும் வைத்திருக்க முடியும், ஆனால் பழைய மாதிரி தலைமைத்துவ நடைமுறையை அரசாங்கம் தொடரக்கூடாது.

தனியார் பாடசாலைகள் அரைகுறையா சந்தைப் படுத்தும் முறையில் (Quasi Marketization) தொழிற்படுதற்கான வலுவான சட்டங்களையும், விதிமுறைகளையும் அரசாங்கம் உருவாக்க வேண்டும். மாறும் நிலைமைகளுக்கேற்ப அவற்றை மாற்றியமைக்க வேண்டும்.

மட்டுப்படுத்தப்பட்ட தனியார் மயமாக்கலும் விரிவுபடுத்தப்பட்ட சந்தைப்படுத்தலும் தான் உலக ரீதியாகவே ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. மக்கள் சீனக் குடியரசிற்கூட இது ஏற்கப்பட்டு ள்ளது.

அரைகுறையான சந்தைப்படுத்தலைத் திறமையாக மேற்கொள்வதே கல்வியை வினைத்திறன், விளைதிறன்மிக்கதாகவும் சமூக நீதியுடனும் வழங்குவதற்குரிய வழியாகும். சுதந்திரமான பாடசாலை முறை, பெற்றோருக் கான தெரிவுச் சுதந்திரம், பொதுமக்களுக்கு வகை கூறுதல், தரமான கல்வியை உறுதிப்படுத்தல், செலவு நன்மை மதிப்பீட்டை உறுதிப்படுத்தல் போன்றவற்றை நிலைபெறச் செய்யும் வகையில் தனியார் கல்வி நிறுவனங்கள் ஒழுங்கான கல்விச் சந்தைப் படுத்தலை மேற்கொள்வதைக் கண்காணிப் பதில் அரசாங்கங்கள் ஈடுபட வேண்டும்.

இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, கனடா, நியூசிலாந்து, ஐக்கிய அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளின் அனுபவங்களை சரியாகப் புரிந்துகொண்டு இலங்கையும் தன் எதிர்கால தனியார் மயப்படுத்தும் திட்டங்களை செயற்படுத்த முடியும்.

## அடிக்குறிப்புக்கள்

1. Sunita Kikeri John Nellis, and Mary Shirley; & others **World Bank Policy Research Bulletin**, Volume 3, No.4, World Bank. USA. p1.
2. *Ibid,*
3. *Ibid,*
4. *Ibid,*
5. *Ibid.*,p.3
6. Kwong, Julia;(2000); *Introduction : Marketization and Privatization in Education*, **International Journal of Educational Development.** 20 UK p.88,
7. *Ibid.*, p. 89
8. *Ibid,*
9. *Ibid,*
10. Whitty, Geoff and Power, Sally; (2000); *Marketization and Privatization in Mass Education System*, **International Journal of Educational Development** 20, p.97
11. *Ibid.*, p. 98
12. *Ibid,*
13. *Ibid,*
14. *Ibid.*, p. 99
15. *Ibid,*
16. *Ibid,*
17. Kwong, Julia - opcit, p.87